முருகப்பெருமான் துணை

**மகான் கணபதிதாசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

27.07.2021, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க
அவதார யோகியே தேசிகா வாழ்க
மாறுதலை உன் தவபலத்தால் இனிதே
மண்ணுலகம் அடையும் என்று கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ நள்ளித்திங்கள் தன்னில்
தெரிவிப்பேன் லாபத்திகதி குசன்வாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் 11ம் நாள், 27.07.2021 செவ்வாய்கிழமை)
தேசிகனுக்கு கணபதி தாசர் யானும்
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான தர்ம பலம் கூட்டும்
ஞான தேசிகனே கலியின் சிறந்த ஞானி
நம்பிக்கை வைத்து ஓங்காரக்குடில் நோக்கிவர
4. வருகவே மக்களின் கர்மவினைகள் ஓடும்
வறுமை பசி பிணி துன்பங்களும் அகலும்
தர்மத்தின் அவசியமும் பலமும் உணர்ந்து
தரணியோர் தவராஜன் வழிக்கு வரநேரும்
5. நேர்மை கொண்ட மக்கள் சமூகம்
நிலமதனில் அரங்கனால் உருவாகும்
முருகப்பெருமான் வழிபாடு பெருகி
முழுமை ஞானம் உறுதி ஆகும்
6. ஆகவே இந்தவித அற்புதம் தன்னை
அகிலம் அரங்க தேசிகனால் அடையும்
யுகமாற்றம் செய்ய வந்த ஞானி
உயர்வான தயவும் ஆசியும் மக்கள் பெற்றால்
7. பெற்றாலே பிரச்சனைகள் அகன்றோடும்
பொருளாதாரம் எனும் வளங்கள் கூடும்
ஏற்றாலே அரங்கன் ஞானத் திருவடியை
எவ்வித இடர்களும் இன்றி பாதுகாப்பு கூடும்
8. கூடவே மக்களிடை மாற்றமும்
குடும்ப சேமமும் உலக சேமமும் ஆகி
ஈடேறும் ஆற்றல் பட குரு அருள் துணையாக
இந்தவித அற்புதத்தை நடத்தும் வண்ணம்

9. வண்ணமாக வடிவேலன் மகா சூட்சுமம் ஆக
வரம் பெற்றுவந்த ஞான தேசிகனே
அண்ணலாக மக்களை காத்துவர
அனுகி தீட்சை பெற்றவருக்கும்

10. அவனியில் தர்மத்தில் பொருள் உதவி செய்து
அரங்கா என சரணடைவு கண்டவருக்கும்
புவனமதில் எந்த சக்தியினாலும் அழிவில்லை
பிரளயமே வந்தாலும் ஆபத்தில்லை என்பேன்

11. என்கவே குருவடியாம் அரங்கன் திருவடியில்
இந்த உலகோர் பற்றுவைத்து வருதலுற
இன்பமான ஞான யுகவாழ்வு பெற்று
இனிதே சகலரும் ஞானிகள் ஆவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–